மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.04/2022
அ.வ.எண்.70/2022

செல்வி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. இருசன்
2. பச்சியம்மாள்
3. ராஜ்குமார்
4. தங்கமணி
5. முருகன்
6. பாக்கியம் ... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 18.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.கேசவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை 1950 ம் ஆண்டு முதல் பச்சமுத்து என்பவர் ஓலை வீடு கட்டி அரசிற்கு செலுத்த வேண்டிய வரிகளை

செலுத்தி அனுபவித்து வந்தார். அதன்பிறகு பச்சமுத்துவின் மகனான மாதேஸ்வரனை மனுதாரர் திருமணம் செய்து கொண்டு, மனுதாரரது சொந்த பணத்தை கொண்டு தாவா சொத்திலுள்ள ஓலை வீட்டை இடித்து கான்கிரீட் வீடு கட்டி 2000ம் ஆண்டு முதல் அனுபவித்து வந்தார். தாவா சொத்திற்குண்டான அனைத்து வரிகளும் மனுதாரரால் செலுத்தப்பட்டு, தாவா சொத்தின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் இருந்து வந்தார்.

(ii) 1, 2 எதிர்மனுதாரர்கள் கணவன் மனைவி ஆவர். அவர்களது மகன் 3ம் எதிர்மனுதாரர் ஆவார். 4ம் எதிர்மனுதாரரின் கணவர் 5ம் எதிர்மனுதாரர் ஆவார். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அக்கம் பக்கத்து நிலத்துக்காரர்கள் ஆவர். உண்மையில் தாவா சொத்தானது வீரக்கல்புதூர் கிராமம், பழைய ச.எண்.67/67 அதன் புதிய ச.எண்.67/5ல் உள்ள நிலம் குன்று புறம்போக்கு நிலமாகும். இந்நிலையில் 6.4.2022ம் தேதியில் 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் கூட்டு சேர்ந்து கொண்டு, சட்டவிரோதமாக தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து, மனுதாரரையும், அவரது மகளையும் தாக்கி மனுதாரருக்கும், அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தினர். இதுகுறித்து கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் அளித்து, அது நிலுவையிலுள்ள நிலையில், மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக 2ம் எதிர்மனுதாரர் அ.வ.எண்.187/2021 என்ற வழக்கையும், 2 முதல் 3 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள் OP.No.38/2022 என்ற கேவியட் மனுவையும் தாக்கல் செய்தனர். மேலும் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை ஆக்கிரமிக்கவும், தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு இடையூறும் செய்து வந்ததால் நீதிமன்ற ஆணையரை நியமித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் துணையுடன் தாவா சொத்தை அளந்து, அதன் பௌதீக தன்மைகள் மற்றும் அளவுகள் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2 மற்றும் 4 முதல் 6ம் பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:—</u>

<u>(குறிப்பாணையின் பேரில் இப்பதிலுரை இம்மனுவின் எதிர்மனுதாரர்களால் எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா சொத்தை 1950ம் ஆண்டு முதல் பச்சமுத்து என்பவர் ஓலை வீடு கட்டி அனுபவித்து வந்ததாகவும், அதன்பிறகு பச்சமுத்துவின் மகனான மாதேஸ்வரனை மனுதாரர் திருமணம் செய்து கொண்டு, மனுதாரரது சொந்த பணத்தை கொண்டு தாவா சொத்திலுள்ள ஓலை வீட்டை இடித்து கான்கிரீட் வீடு கட்டி 2000ம் ஆண்டு முதல் தாவா சொத்திற்குண்டான அனைத்து வரிகளும் மனுதாரரால் செலுத்தப்பட்டு, தாவா சொத்தின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் இருந்து வந்ததாகவும் கூறுவது பொய்யாகும்.

(ii) எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை பொறுத்து 3ம் நபர்கள் என்பதும், தாவா சொத்திற்கு அருகில் வசித்து வருகிறார்கள் என்பதும் தவறானதாகும். தாவா சொத்தின் தென்புற மூலையில் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களின் நிலம் உள்ளது என்பதும், தாவா சொத்தின் வடகிழக்கு மூலையில் 4, 5 எதிர்மனுதாரர்களின் நிலம் உள்ளது என்பதும், தாவா சொத்தின் வடபுறத்தில் 6ம் எதிர்மனுதாரரின் குடிசை வீடு உள்ளது என்பதும் தவறானதாகும். வீரக்கல்புதூர் கிராமம் ச.எண்.67/5ல் குன்று புறம்போக்கு நிலம் உள்ளது என்பதும், அதில் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு நத்தம் திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டது என்பதும் உண்மையே. ஆனால் மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் சுமார் 50 சென்ட் நிலத்தை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமித்து அனுபவித்து வருகின்றனர்.

(iii) தாவா சொத்தின் சுவாதீனத்தில் மனுதாரர் உள்ளார் என்பதும், மேற்படி சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனர் என்பதும் பொய்யானதாகும். உண்மையில் மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் தான் எதிர்மனுதாரர்களது நிலங்களின் எல்லைக் கற்களை அகற்றி எதிர்மனுதாரர்களின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தனர். அதனால் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.187/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் தான் 6ம்

எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நிலத்தையும், பொது தடவழியையும் ஆக்கிரமித்து சாக்கடை தொட்டி கட்டியுள்ளார். மனுதாரர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் தாவா சொத்து மனுதாரரின் மாமனார் பச்சமுத்து என்பவருக்கு அனுபவப்படி பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தில் மனுதாரர் காங்கிரீட் வீடு கட்டி கடந்த 2000ம் வருடம் முதல் தாவா சொத்தின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் இருந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள் என்றும், பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீதும் அ.வ.எண்.187/2021 என்ற வழக்கையும், கேவியட் மனுவையும் தாக்கல் செய்துள்ளனர் என்றும், தாவா சொத்து குன்று புறம்போக்கு நிலம் என்பதால் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுதாரரின் அமைதியான சுவாதீனத்திற்கு இடையூறு செய்து வருகின்றனர் என்றும், எனவே மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையரை நியமித்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரின் துணையுடன் தாவா சொத்தை அளந்து, அதன் பௌதீக தன்மைகள் மற்றும் அளவுகள் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து குன்று புறம்போக்கு நிலம் என்பது உண்மையே என்றும், ஆனால் தாவா சொத்தில் மனுதாரர் சுவாதீன அனுபவத்தில்

இல்லை என்றும், மேற்படி சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனர் என்பது பொய்யானது என்றும், உண்மையில் மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் தான் எதிர்மனுதாரர்களது நிலங்களின் எல்லைக் கற்களை அகற்றி எதிர்மனுதாரர்களின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தனர் என்றும் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ, தாவா சொத்தில் மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எவ்வகையிலும் இடைஞ்சல்களோ, தொந்தரவுகளோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் மற்றும் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனர் என்பது பொய்யானது என்றும், உண்மையில் மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் தான் எதிர்மனுதாரர்களது நிலங்களின் எல்லைக் கற்களை அகற்றி எதிர்மனுதாரர்களின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்தனர் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iv) மேற்கண்ட இருதரப்பு வாதங்களை கருத்தில் கொள்கையில், மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை பரிசீலனை செய்கையில், அதில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துகளின் அமைப்பை மாற்ற முயற்சிப்பதாக எவ்வித சங்கதிகளும் குறிப்பிடப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் வழக்குரையை பரிசீலனை செய்கையில், தரப்பினரிடையே எல்லை தொடர்பான பிரச்சனை உள்ளதற்கான எவ்வித சாத்தியக்கூறுகளும் இல்லை என்பது தெரியவருகிறது. மேலும் வழக்குரையிலோ, வழக்குமூலப் பத்தியிலோ குறிப்பாக எந்த தேதியில் எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் சுவாதீனத்திலுள்ள பகுதிகளை ஆக்கிரமிக்க முயற்சி செய்தனர் என்பது குறித்து குறிப்பாக தெரிவிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

(v) இந்நிலையில் இவ்வழக்கானது மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில்

கொள்கையில், பொதுவாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்குகளில் தரப்பினரிடையே எல்லை தொடர்பான பிரச்சனைகள் இருந்தாலோ அல்லது தாவா சொத்தின் இயற்கை அமைப்பை மாற்ற முயற்சிப்பதாக சாட்டுரைகள் இருந்தாலே அன்றி நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தின் பௌதீக தன்மைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய கோருவது என்பது ஒரு தரப்பினருக்கு ஆதரவாக சாட்சியங்களை சேகரிப்பதாக அமைந்துவிடும் என மாண்பமை உயர்நீதிமன்றத்தால், **"2020 (1) CTC 182, S.Anand and others vs. A.Jeyabalan and others"** என்ற முன்தீர்ப்பில் மாண்பமை உயர்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள சட்ட நிலைப்பாட்டை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

(vi) அவ்வகையில், இம்மனு பிரமாணப்பத்திரிக்கையில் மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துகளின் அமைப்பை மாற்ற முயற்சிப்பதாகவோ, தங்களுக்குள் எல்லை பிரச்சனை உள்ளதாகவோ, எவ்வித சங்கதிகளும் முன்வைக்காத நிலையில், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்துகளின் பௌதீக தன்மைகள் மற்றும் அளவீடுகள் தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுவது அவசியமற்றது எனவும், மனுதாரர் தாவா சொத்தின் பேரிலுள்ள தனது சுவாதீனத்தை தக்க ஆவணங்களின் அடிப்படையில் தான் நிரூபிக்க வேண்டும் என்றும், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுவது சாட்சியத்தை சேகரிப்பதாகிவிடும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தகுதிப்பாடற்றது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம்

ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.07.30 14:45:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.07.30 14:45:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.